செய்தி வெளியீடு எண். 190 நாள். 1.3.2010

**<u>மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் 3.3.2010 (புதன்கிழமை) மாலை 5.00 மணிக்கு திருச்சி–அண்ணா விளையாட்டரங்கில், கலைஞர் வீட்டு வசதித் திட்டத்தினை தொடங்கிவைத்து விழாப் பேருரையாற்றுகின்றார்கள்.</u>**

3.3.2010 (புதன்கிழமை) மாலை 5.00 மணிக்கு திருச்சி–அண்ணா விளையாட்டரங்கில், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் அவர்கள், மாண்புமிகு தமிழ்நாடு துணை முதலமைச்சர் அவர்களின் தலைமையில் நடைபெறும் விழாவில், 'கலைஞர் வீட்டு வசதித் திட்டத்தினை' தொடங்கிவைத்து விழாப் பேருரையாற்றுகின்றார்கள். இவ்விழாவில் மாண்புமிகு தமிழ்நாடு போக்குவரத்துத் துறை அமைச்சர் திரு கே.என்.நேரு, மாண்புமிகு வனத்துறை அமைச்சர் திரு என்.செல்வராஜ், மாண்புமிகு மத்திய சமூக நீதி மற்றும் அதிகாரமளிப்புத்துறை இணை அமைச்சர் திரு து.நெப்போலியன், தமிழ்நாடு அரசின் தலைமைச் செயலர் திரு கே.எஸ்.ஸ்ரீபதி, இ.ஆ.ப., ஆகியோர் இவ்விழாவில் கலந்துகொண்டு முன்னிலையுரையாற்றுகின்றார்கள். சட்டமன்ற உறுப்பினர்கள் திரு டி.சுதர்சனம்(இந்திய தேசிய காங்கிரஸ் கட்சி), திரு ஜி.கே.மணி(பாட்டாளி மக்கள் கட்சி), செல்வி கே.பாலபாரதி(மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி), திரு வி.சிவபுண்ணியம்(இந்திய கம்யூனிஸ்ட் கட்சி), திரு டி.ரவிக்குமார்(விடுதலை சிறுத்தைகள் கட்சி), திரு அப்துல் பாசித் (இந்திய தேசிய முஸ்லீம் லீக்), திரு பூவை ஜெகன்மூர்த்தி (புரட்சி பாரதம் கட்சி) ஆகியோரும், மேக்சேசே விருது பெற்ற சமூக சேவகர் திருமதி கிருஷ்ணம்மாள் ஜெகந்நாதன் ஆகியோர் கலந்துகொண்டு வாழ்த்துரை வழங்குகின்றார்கள். ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையின் அரசு முதன்மைச் செயலாளர் திரு க.அஷோக் வர்தன் ஷெட்டி, இ.ஆ.ப., விழாவில் வரவேற்புரையாற்றுகின்றார்கள். திருச்சி மாவட்ட ஆட்சித்தலைவர் திரு தா.சவுண்டையா, இ.ஆ.ப., நன்றியுரையாற்றுகின்றார்கள். மேலும் இவ்விழாவில் மாண்புமிகு மத்திய–மாநில அமைச்சர் பெருமக்கள், நாடாளுமன்ற–சட்டமன்ற உறுப்பினர்கள், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை ஆணையர் திரு ககன்தீப் சிங் பேடி, இ.ஆ.ப., ஆகியோர் கலந்து கொள்கின்றனர்.

<u>வெளியீடு:</u> இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9